JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 207/2018 Date:12.09.2023 P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோனிஷா |
| தந்தை பெயர், க/பெ | : | சிபிராஜேஷ் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 12th day of September 2023.

1, 2 எதிரிகள் ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது நம்பர் 21, கண்டிகை தெரு, கொரட்டூர் சென்னையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அதசாஆ.1** ஆகும். கடந்த 02.12.2017ம் தேதி நான் ஒரு மருத்துவர் எனது மருத்துவம் சம்மந்தமாக மருத்துவமனைக்கு சென்றியிருந்தேன். மாலை 06.00 மணியளவில் நான் அலுவலகம் சென்றியிருந்தேன். நான் இரவு 9.30 மணியளவில் என் பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தேன். அப்பொழுது எனது காரை வீட்டின் வாசலில் நிறுத்திவிட்டு பார்த்தபோது எனது வீட்டின் உள்ளே லைட் எரிந்துக்கொண்டியிருந்தது. நான் வீட்டை விட்டு சென்றபோது லைட்டை அனைத்துவிட்டு சென்றேன். நான் எனது கணவர் தான் வீட்டிற்கு வந்துயிருக்கிறார் என்று வீட்டிற்குள் மெதுவாக சென்றேன். அப்பொழுது இரண்டு நபர்கள் முகமூடி அணிந்தியிருந்தார்கள். அவர்கள் கையில் கடப்பாறை இருந்தது. அவர்கள் என்னை தாக்குவதற்காக வந்தார்கள், நான் திடீர் என்று அங்கியிருந்து ரோட்டை நோக்கி ஓடிவிட்டேன். அப்பொழுது அந்தந பர்கள் சுமார் 50, 100 மீட்டர் அளவு தூரம் என்னை துரத்தி வந்தார்கள். அதன்பின்பு அவர்கள் திரும்பி சென்றுவிட்டார்கள்.

2. நான் அதன்பின்பு ரோட்டில் இருந்த நபர்களிடம் உதவி கேட்டு காவல் துறைக்கு தகவல் தெரிவித்தேன். அதன்பின்பு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அவர்கள் துணையுடன் நான் வீட்டிற்கு சென்றேன். வீட்டில் சென்று பார்த்தபோது இரண்டு ஜோடி கம்பல், சின்ன செயின், மோதிரம், கேமரா, ஐபோன், மோட்டர்லா போன் இவைகள் காணாமல் போனது. 03.12.2017ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன்பின்பு எனது கணவர் வந்தபிறகு வீட்டில் எல்லா இடத்திலும் தேடிபார்த்தபோது நாங்கள் வைத்தியிருந்த நகைகள் சேப்டி லாக்கரில் அவை தனியாக இருந்தது. எங்கள் வீட்டில் காணாமல் போனது கேமரா, ஐபோன், மோட்டோஜி செல்போன் ஆகியவை மட்டும் தான் காணாமல் போனது. அதன்பின்பு ஒரு வாரம் கழித்து திருடர்களை பிடித்துவிட்டதாக காவல் நிலையத்தில் கூறினார்கள்.

3. அதன்பின்பு காவல் நிலையம் சென்று அந்த நபர்களை காவல் நிலையத்தில் பார்த்தோம். அந்த நபர்களில் ஆஜர் 1ம் எதிரியும் ஒரு நபர் (முகமது இர்பான்) ஆவார். மற்ற. எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ( 2ம் எதிரி முகமது ஜாகிர்உசேன் பிரிவு 317ன் கீழ் மனு

தாக்கல் செய்து மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளது, எதிரிகளை அடையாளம் குறித்து எந்தவித ஆட்சேபணையும் ஏற்படுத்தப்படவில்லை என்று மேற்குறியீடு செய்யப்பட்டுள்ளது) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கேமரா, மோட்டர்ஜி செல்போன், ஐபோன் ஆகியவை என்னுடையது தான். அதனை காவல் நிலையத்தில் அடையாளம் காட்டினேன். அது **அதசாஆ. 2** ஆகும். அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

4. புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். நான் மருத்துவமனையில் பணி புரிந்து வருவதால் என்னுடைய பணி நேரம் என்ன என்றால் நான் மகப்பேர் மருத்துவ ஆலோசகராக இருந்து வருவதால் அப்பாயிண்ட்மெண்ட் அடிப்படையில் நான் நோயாளிகளை பார்த்து வருகிறேன். நான் கொடுத்த புகாரில் நான்கு செல்போன்கள் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதனுடைய மாடலை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலிருந்து இடைக்கால பொறுப்பில் நிக்கான் கேமரா தான் பெற்றுச் சென்றேன் என்றால் சரிதான். ஆனால் புகாரில் கேனான் டி.எஸ்.எல்.ஆர் கேமரா காணாமல் போனதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசாருக்கு எவ்வாறு புகார் கொடுத்தேன் என்றால் போன் மூலமாக தகவல் கொடுத்தோம். போலீசார் சம்பவம் நடந்து 15, 20 நிமிடத்தில் வீட்டிற்கு வந்துவிட்டார்கள், இரவு முழுவதும் எங்கள் வீட்டில் தான் ஆய்வு மேற்கொண்டார்கள், மறுநாள் காலை 11.00 மணியளவில் தான் திரும்ப சென்றார்கள். சிசிடிவி கேமரா பதிவுகளில் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் முகமூடி அணிந்தியிருந்தார்களா இல்லையா என்றால் முகமூடி அணியவில்லை.

5. நான் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்தபோது எத்தனை மணிக்கு எதிரிகள் வீட்டிற்குள் சென்றார்கள் என்றால் இரவு 9.10 மணியளவில் உள்ளே சென்றார்கள். வீட்டினுள் இருந்து வெளியே வரும்போது எதிரிகள் முகமூடி அணிந்தியிருந்தார்கள். எதிரிகள் என்னை கம்பியால் தாக்க முற்பட்டதாக கூறியுள்ளேன் என்றாலும் மேற்படி கம்பியை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்தேனா அல்லது போலீசார் மேற்படி கம்பியை கைப்பற்றினார்களா என்றால் தெரியாது. போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தபோது வீட்டிற்குள் செல்லும்போது கேமரா வைத்துக்கொண்டு உள்ளே சென்றார்களா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது.நான் கணவருக்கு எப்பொழுது கால் செய்தேன் என்றால் 9.40 மணியளவில் போன் செய்தேன். என் கணவரிடம் விசாரித்தபோது நகைகள் லாக்கரில் இருப்பதாக கூறினாரா என்றால் நான் வீட்டிற்கு வெளியே இருந்து தான் என் கணவருக்கு போன் செய்தேன்.

6. நான் புகாரில் நகைகள் காணாமல் போனதாக கூறியுள்ளேன் என்றாலும் புகார் கொடுப்பதற்கு முன்பாக என் கணவரிடம் விசாரித்து நகைகள் லாக்கரில் உள்ள விவரத்தையும் நகைகள் காணாமல் போகவில்லை என்ற விவரத்தையும் தெரிந்து கொண்டேனா என்றால் நான் புகார் கொடுப்பதற்கு முன்பாக என் கணவரிடம் நகைகள் எங்கு இருக்கிறது என்ற விவரத்தை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. என் கணவர் போலீஸ் விசாரணையில் நகைகள் காணாமல் போனதாக நான் தகவல் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகளை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். யார் அதை கைப்பற்றினார்கள் என்றால் யார் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் புகாரை காலத்தாமதமாக கொடுத்துள்ளேன் என்றாலும் புகாரில் நகைகள் காணாமல் போனதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும் என்னுடைய கேமராவிற்கு பதிலாக வேறு கேமராக்களை தான் நான் பெற்று சென்றுள்ளேன் என்றால் சரியல்ல.

7. எதிரிகளை அடையாளம் காட்டி சிறைச்சாலையில் அடையாள அணிவகுப்பு ஏதேனும் நடத்தினார்களா என்றால் இல்லை. எதிரிகள் இருவருக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரிகளை தவறுதலாக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றாலும் எதிரிகள் வழக்கில்

ஈடுபட்டுள்ளதாக போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur